பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 17 வியாழக்கிழமை 02.09.2021 கதிர் 165

## வவுனியாவில் மேலும் இருவர் கொரோனாத் தொற்றால் சாவு

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் கொரோனாத் தொற்றால் மேலும் இருவர் மரணமடைந்துள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் கொரோனாத் தொற்று தீவிரம் அடைந்துள்ள நிலையில் பலரும் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு வருகின்றனர். ☞ 2

## அனலைதீவில் கர்ப்பவதிகள் இருவர் உள்ளிட்ட ஐவருக்குத் தொற்று உறுதி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அனலைதீவில் இன்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் ஐவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களில் இருவர் கர்ப்பவதிகள் என்று சுகாதாரத் தரப்பினர் தெரிவித்தனர்.

கிராமத்தில் சந்தேகத்துக்கிடமான 30 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போதே குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

## அச்சுவேலியில் மின்னல் தாக்கி குடும்பஸ்தர் பரிதாப உயிரிழப்பு

### இருவர் காயங்களுடன் வைத்தியசாலையில்



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

மின்னல் தாக்கி 3 பிள்ளைகளின் தந்தையான இலங்கை போக்குவரத்துச் சபையின் சாரதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அச்சுவேலி, நாவற்காடு பகுதியில் இந்தச் சம்பவம் ☞ 2

# தென்மராட்சியில் இன்று 106 பேருக்கு கொரோனா

## கைதடி அரச இல்லத்தில் 72 பேர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., தென்மராட்சி, சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இன்று முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையில் 106 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது.

அவர்களில் 72 பேர் கைதடி முதியோர் இல்லத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் இன்று 103 பேரிடம் அதிவிரைவு அன்டிஜன் ☞ 2

## 24 கைதிகளுக்கு சிறப்பு மன்னிப்பு

நீண்ட காலம் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் சிறைக் கைதிகளை நிபந்தனை அடிப்படையில் விடுதலை செய்யும் நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட சபை 24 மறுவாழ்வு பெற்ற கைதிகளை விடுவிக்கப் பரிந்துரை செய்துள்ளது எனச் சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

24 கைதிகளின் விடுதலைக்கு சிறை நிர்வாகம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் லோகன் ரத்வத்தே ஒப்புதல் அளித்துள்ளார்.

விடுவிக்கப்பட வேண்டிய கைதிகளின் ☞ 2

## செப்டெம்பர் 14 வரை ஊரடங்கு தொடருமா?

### நாளை இறுதி முடிவு என சுகாதார அமைச்சு பதில்

இலங்கையில் தற்போது அமுலில் உள்ள முழுநேர தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி வரை நீடிக்கப்படுமா என்பது தொடர்பில் நாளையே தீர்மானம் எடுக்கப்படும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குண ☞ 2

## கொரோனாச் சட்டத்தை மீறிய மேலும் 621 பேர் சிக்கினார்கள்

கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 621 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தனிமைப் ☞ 2

## நாட்டில் ஒரு சில தொழிற்சங்கங்களினால் ஆசிரியர் சமூகத்தை ஆட்டுவிக்க முடியாது!

### அமைச்சர் விமல் ஆவேசம்



இலங்கையில் ஒரு சில தொழிற்சங்கங்களால் இந்நாட்டிலுள்ள ஒட்டுமொத்த அதிபர் - ஆசிரியர் சமூகத்தை ஆட்டுவிக்கமுடியாது. அரசால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத் திட்டம் தொடர்பில் மேற்படி தொழிற்சங்கங்கள் தமக்குத் தேவையான வகையிலேயே தகவல்களை பறிமாற்றியுள்ளன. உண்மை நிலைவரத்தை நாம் தெளிவுபடுத்திவிட்டோம். எனவே, ஒரு சில தொழிற்சங்கங்கள் என்ன முடிவை எடுத்தாலும், அதிபர், ஆசிரியர்கள் மாணவர்களுக்காக கல்வி நடவடிக்கையை முன்னெடுப்பார்கள் என நம்புகின்றோம்.

இவ்வாறு அதிபர் - ஆசிரியர் சேவைகளில் காணப்படும் சம்பளப்பிரச்சினைகளுக்குதீர்வை முன்வைப்பதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழு உறுப்பினரான அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

'அமைச்சரவை உப குழுவால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வை அதிபர் - ஆசிரியர் தொழிற்சங்கங்கள் நிராகரித்துள்ளன. அப்படியானால் அரசின் மாற்று நடவடிக்கை என்ன, ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் மீள சேவைக்கு அழைக்கப்படுவார்களா?' என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். ☞ 2

## ஐ.தே.கவின் புதிய பயணம் பற்றி தலைவர் ரணில் 5ஆம் திகதி உரை

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய பயணம் மற்றும் நாட்டை மீட்பதற்கான தேசிய வேலைத்திட்டங்கள் தொடர்பில் அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 05ஆம் திகதி சிறப்புரையாற்றவுள்ளார் என்று கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

ஐக்கிய தேசியக் கட்சி உதயமாகி செப்டெம்பர் 05 ஆம் திகதியுடன் 75 ஆண்டுகள் நிறைவடைகின்றன. ☞ 2



## ஊரடங்கு வேளையில் வேட்டைக்குச் சென்ற நபர் துப்பாக்கியுடன் சிக்கினார்

கிளிநொச்சி, சாந்தபுரம் கிராமத்தில் உள்ளூர் இடியன் துப்பாக்கியுடன் ஒருவர், வன ஜீவராசிகள் திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சாந்தபுரம் காட்டுப்பகுதியில் குறித்த துப்பாக்கியுடன் வேட்டைக்குச் சென்ற நிலையில் இவர் கைதுசெய்யப் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## அச்சுவேலியில்......

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)
இன்று பிற்பகல் ஒரு மணியளவில் இடம் பெற்றது.



அச்சுவேலி, நாவலம்பதியைச் சொந்த இடமாகவும் உடுப்பிட்டியை வதிவிடாகவும் கொண்ட தியாகராஜா மதனபாலன் (வயது - 41) என்பவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்த இருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விநாயகமூர்த்தி தங்கேஸ்வரன் (வயது-38), கமலநாதன் நிமர்சன் (வயது-20) ஆகியோரே காயமடைந்துள்ளனர்.

வயலில் உழவில் ஈடுபட்டபோது சம்பவம் இடம்பெற்றது என அச்சுவேலி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் அச்சுவேலி பிரதேச மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## வவுனியாவில்......

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)
இந்நிலையில், கொரோனத் தொற்று காரணமாக சிகிச்சை பெற்று வந்த வவுனியாவின் பட்டாணிச்சூர் பகுதியைச் சேர்ந்த இருவர் மரணமடைந்துள்ளனர்.

ஒருவர் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் வவுனியா வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றிரவு மரணமடைந்துள்ளார். மற்றைய நபர் வீட்டில் கொரோனாத் தொற்று காரணமாக தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் இன்று காலை மரணமடைந்துள்ளார்.

குறித்த இருவரது சடலங்களையும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அடக்கம் செய்ய சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, வவுனியாவில் நேற்று போகஸ்வேவ, நம்பைவெட்டி, தோணிக்கல், சூசைப்பிள்ளையார்குளம், இளமருதங்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 5 பேர் மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (100)

## செப்டெம்பர்......

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)
வர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் வாராந்தம் வெள்ளிக்கிழமை கொரோனா செயலணிக் கூட்டம் நடைபெறும். இதன்போது நாட்டு நிலைவரம் மீளாய்வு செய்யப்பட்டு முடிவுகள் எடுக்கப்படும்.

சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு உட்பட துறைசார் நிபுணர்கள் பலர் சந்திப்பில் பங்கேற்பார்கள்.

இதன்படி நாளை நடைபெறவுள்ள கூட்டத்தின்போதும் நிலைமை மீளாய்வு செய்யப்படும். அந்தவகையிலேயே ஊரடங்கு தொடருமா அல்லது எதிர்வரும் 6ஆம் திகதியுடன் தளர்த்தப்படுமா என்ற அறிவிப்பு விடுக்கப்படும்.

## 24 கைதிகளுக்கு.....

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)
பட்டியல் இன்னும் வெளியிடப்படவில்லை. அவர்கள் எதிர்வரும் 17ஆம் திகதி விடுவிக்கப்படவுள்ளனர்.

## தென்மராட்சியில்......

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)
பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. அவர்களில் 25 பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 9 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது.

இவ்வாறு இன்று அடையாளம் காணப்பட்ட 34 பேரையும் அவர்களது உடல்நிலையைக் கணித்து ஒரு பகுதியினர் வீடுகளில் பராமரிக்கவும், மற்றொரு பகுதியினர் கொரோனா இடைத்தங்கல் சிகிச்சை நிலையங்களில் கண்காணிக்கவும் எனப் பரிந்துரைக்கப்பட்டனர்.

இதேவேளை, கைதடி அரச முதியோர் இல்லத்தில் பராமரிக்கப்படும் முதியவர்கள், பணியாளர்கள் 156 பேரிடம் இன்று அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. அவர்களில் 68 முதியவர்கள் மற்றும் 4 பணியாளர்கள் என 72 பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

அவர்களை கைதடி அரச முதியோர் இல்லத்தில் வைத்து மருத்துவக் கண்காணிப்புக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கைதடி அரச முதியோர் இல்லத்தில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் முதியவர்கள் 41 பேரும், ஊழியர்கள் இருவரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

இதனிடையே அங்கு பராமரிக்கப்பட்டு வந்த முதியவர்களில் ஒருவர் நேற்று கொரோனாவால் உயிரிழந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## கொரோனாச்......

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)
படுத்தல் விதிமுறைகளை மீறிப் பயணித்த 82 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்நிலையில் இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிப் பயணித்தக் குற்றச்சாட்டில் 63 ஆயிரத்து 331 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## வேட்டைக்குச்.....

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)
பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவரிடம் துப்பாக்கி, மோட்டார் சைக்கிள் போன்றவையும் கைப்பற்றப்பட்டுள்ளன.

## நாட்டில்.....

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இல்லை. அரசால் வழங்கப்பட்டுள்ள தீர்வு தொடர்பில் ஒரு சில தொழிற்சங்கங்கள் தமக்குத் தேவையான விதத்தில்தான் அதிபர், ஆசிரியர்களுக்கு தகவல்களைப் பறிமாற்றியுள்ளன. ஒரு சில தொழிற்சங்கங்களால் இந்நாட்டிலுள்ள அதிபர் - ஆசிரியர் சமூகத்தை ஆட்டுவிக்கமுடியாது. மனநிலைமையை மாற்றவும் முடியாது.

மாணவர்களுக்கான கற்பித்தல் நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும் என்பதையே பெரும்பாலான அதிபர், ஆசிரியர்கள் விரும்புகின்றனர். அவ்வாறானவர்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாம் இருந்தோம். இன்னமும் இருக்கின்றோம். அதனால்தான் இரு வாரங்களுக்குள் அமைச்சரவைக்குத் தீர்வு திட்டத்தை முன்வைத்தோம்.

இன்று நாம் தீர்வுத் திட்டம் தொடர்பில் உண்மை நிலைமையைத் தெளிவுபடுத்தியுள்ளோம். எனவே, சில தொழிற்சங்கங்கள் எத்தகைய முடிவை எடுத்தாலும், அந்தத் தீர்மானத்தை எதிர்த்தேனும் மாணவர்களின் கல்விக்காக அதிபர், ஆசிரியர்கள் முன்னிலையா வார்கள் என நம்புகின்றோம். எனவே, கலக்கமடைய வேண்டியதில்லை - என்றார்.

## ஐ.தே.கவின்......

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)
இதனை முன்னிட்டு கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க 'ஒன்லைன்' ஊடாக உரையாற்றவுள்ளார்.

மாலை 5 மணி முதல் 6 மணிவரை பேஸ்புக், யூடியூப் உட்பட சமூகவலைத்தளங்களில் உரை ஒளிபரப்பாகும். ஐக்கியதேசியக்கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் இளம் தலைமுறையினருக்காகவே தலைவர் உரையாற்றுகின்றார். இதன்போது கட்சியின் புதிய பயணம் தொடர்பில் தெளிவுபடுத்துவார்.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. சமூகக் கட்டமைப்பு சீர்குலைந்துள்ளது. எதிர்காலம் பற்றிய எதிர்ப்பார்ப்பு இளம் தலைமுறையினருக்கு இல்லாது போயுள்ளது.

எனவே, சுகாதாரம் தொடர்பான தேசிய வேலைத்திட்டம், பொருளாதாரத்தை மீட்பதற்கான தேசிய வேலைத்திட்டம், அறிவுசார தேசிய வேலைத்திட்டம் உள்ளிட்டவற்றையும் அவர் முன்வைப்பார்.

நாட்டின் பொருளாதாரத்தை எம்மால் மீட்க முடியும். ஆனால் உயிரிழந்த மக்களை மீளப் பெறமுடியாது. எனவேதான் இன்னும் இரு வாரங்களுக்கு நாட்டை முடக்குமாறு கேட்கின்றோம் - என்றார்.


**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.




நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# தமிழ்க் கூட்டமைப்பின் தவறு

மாகாணசபைத் தேர்தல்கள் நீண்டகாலம் இழுத்தடிக்கப்படுகின்றது. கடந்த நல்லாட்சி அரசிற்கு முண்டு கொடுத்த தமிழ்தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி போன்றவையும் இதற்குக் காரணம். இதற்காக இக்கட்சிகள் நாட்டு மக்களிடம் மன்னிப்பு கோரவேண்டும்.

– இப்படி ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார். அதை வழிமொழிவதில் எந்தக் கருத்து வேறுபாடும் இருக்க முடியாது. மாகாணசபைத் தேர்தலை முகம் கொள்ள அஞ்சிய ரணில் விக்கிரமசிங்கவின் நல்லாட்சி அரசு அதற்கு ஒரு கதை விட்டது. மாகாணசபைத் தேர்தல்களை புதிய ஒரே முறைமையின் கீழ் நாடு முழுவதும் ஒரே நாளில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்கின்றோம் என்று அது கயிறு விட்டது. அந்தப் பெயரில் அதுவரை நடைமுறையில் இருந்த மாகாணசபைத் தேர்தல் சட்டங்களையே இல்லாமலாக்கி தேர்தலுக்கு முகம் கொடுக்காமல் தப்பியது.

இந்த நடவடிக்கை எடுக்கப்பட்ட போதே இப்படி ஆகும், புதிய சட்டம் உரிய காலத்தில் வராவிட்டால் மாகாணசபைத் தேர்தல்கள் நடத்த முடியாமல் போய்விடும் என்றெல்லாம் சுட்டிக்காட்டப்பட்டது.

ஆனால் அடுத்த ஒரு வருடத்துக்குள் புதிய சட்டங்களை எப்படியேனும் ஏற்படுத்தி விடுவோம் என்று நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக அறிவித்து, இருந்த தேர்தல் சட்டத்தை 2017 செப்டெம்பரில் இல்லாமல் ஆக்கியது ரணில் நல்லாட்சி அரசு. அதைச் செய்வதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை ரணிலின் நல்லாட்சி அரசு பெற்றுக்கொள்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் போன்றவை தலைகீழாக நின்று உழைத்து அதனை உறுதி செய்தன.

இப்போது இந்தச் சட்டத்தை இல்லாமலாக்கி நான்கு வருடங்கள் கடந்துவிட்டன. புதிய சட்டமும் வரவில்லை, அதைக் காட்டியே மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்படாமல் இழுத்தடிக்கப்படுவதும் தொடர் கதையாகி விட்டது.

இந்தத் தேர்தல் சட்டத்தை இல்லாமல் ஆக்கிய போது, அடுத்த ஒரு வருடத்துக்குள் புதிய தேர்தல் சட்டத்தை கொண்டு வருவோம் என வாக்குறுதி அளித்த ரணிலின் அரசினாலும், அதற்கு முண்டு கொடுத்த கூட்டமைப்பு போன்ற கட்சிகளினாலும் அதற்குப் பின்னர் சுமார் இரண்டரை ஆண்டு பதவியில் இருந்த அந்த அரசின் மூலம் அந்தச் சட்டத்தை கொண்டு வரச் செய்ய முடியவில்லை.

இவ்வாறு மாகாணசபைத் தேர்தல் சட்டத்தை இல்லாமல் ஆக்கும் விடயத்திற்கு தாம் முண்டு கொடுத்து உதவியவை பெரும் ஜனநாயக விரோதச் செயல், மக்களின் உரிமைக்கு ஆப்பு வைத்த கொடூரம், வரலாற்றுத் தவறு என்பவற்றையெல்லாம் குறுகிய காலத்தில் தமிழ்க் கூட்டமைப்பால் உணர்ந்து கொள்ள முடிந்த போதிலும் அந்த ஜனநாயக விரோதச் செயலை நிவர்த்தி செய்வதற்கு காத்திரமான எதையும் கூட்டமைப்பு எடுக்கவே இல்லை என்பதுதான் வேதனைக்குரிய விடயமாகும். அன்றைய நிலையில் தமது அரசின் ஆட்சியை நிலை நிறுத்துவதற்குத் தேவையான அறுதிப் பெரும்பான்மைக்கு கூட்டமைப்பின் ஆதரவில் – கூட்டமைப்பின் ஆதரவில் மட்டும் – தங்கி நின்ற ரணிலின் அரசைக் கொண்டு மாகாணசபைத் தேர்தலுக்கான பழைய சட்டங்களை அப்படியே மீளக் கொண்டு வரும் வேலையை சுலபமாக – மிகச்சுலபமாக – கூட்டமைப்பு செய்திருக்கலாம். ஆனால் செய்யவில்லை – சமாளிப்புக்காக கூட்டமைப்பு சுமந்திரன் அது தொடர்பில் ஒரு தனிநபர் சட்ட மூலத்தை சமர்ப்பித்து நடிப்பு காட்டியதை தவிர.

கூட்டமைப்பு நினைத்திருந்தால் அந்தத் தனிநபர் சட்ட மூலத்தையே ரணிலின் அரசின் மூலம் ஒரு மாதத்துக்குள் நடைமுறைக்குக் கொண்டுவர செய்திருக்க முடியும். அத்தகைய பேரம் பேசும் வலுவான நிலையில்தான் கூட்டமைப்பு அன்று இருந்தது. அந்த வகையில் பார்த்தால் கூட்டமைப்பு செய்த இந்த வரலாற்றுத் தவறு மிக கண்டனத்துக்குரியது. நாட்டு மக்களிடம் அதற்காக கூட்டமைப்பு மன்னிப்புக் கோர வேண்டியது கட்டாயமானது தான்.

# சுற்றுலாப் பயணிகள் வருகை மற்றொரு கொத்தணிக்கு வழி

## நளிந்த ஜயதிஸ்ஸ எச்சரிக்கை



தென்னாபிரிக்காவில் அடையாளம் காணப்பட்டுள்ள புதிய வைரஸ் இலங்கையிலும் பரவலாம் என சுகாதாரத் தரப்பினர் எதிர்வு கூறியுள்ள நிலையில் இந்திய சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு வரவழைப்பது தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணி கேள்வியெழுப்பியுள்ளது.

இந்தியாவில் கொரோனாத் தொற்று மேலும் அதிகரித்து-வரும் நிலையில் அரசாங்கத்தின் இந்த முடிவு புதியதொரு கொத்தணி உருவாக வழிவகுக்கும் என மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

மேலும் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த அரசாங்கம் கடந்த ஒன்றரை வருடகாலமாக முன்னெடுத்த செயற்பாடுகள் மற்றும் தீர்மானங்கள் தொடர்பாக மக்கள் மத்தியில் பல கேள்விகள் எழுந்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

மக்கள் விடுதலை முன்னணியின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கொரோனாத் தொற்றின் முதலாவது அலையைக் கட்டுப்படுத்திய பின்னர் உக்ரைன் நாட்டில் இருந்து சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வரவழைக்கப்பட்ட பின்னர் மீண்டும் கொரோனாத் தொற்று அதிகரித்தமையையும் நளிந்த ஜயதிஸ்ஸ சுட்டிக்காட்டினார்.

# சீன அபிவிருத்தி வங்கியின் தலைமையகம் கொழும்பு துறைமுக நகரத்தில் அமைகிறது

## அமைச்சர் பஸில் தெரிவிப்பு



கொழும்பு துறைமுக நகரத்தில் சீன அபிவிருத்தி வங்கியின் பிராந்தியத் தலைமையகத்தை அமைப்பதற்கு அனைத்து வசதிகளையும் வழங்கத் தயாராக இருப்பதாக அரசாங்கம் சீனாவிற்கு உறுதியளித்துள்ளது.

அத்தோடு இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள சீனாவின் ஆதரவை நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கோரியுள்ளார்.

சீன சபாநாயகர் லி ஜான்ஹூவுடன் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இணையவழிக் கலந்துரையாடலின் போதே நிதி அமைச்சர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இந்நிலையில் கொழும்பு துறைமுக நகரத் திட்டம் உட்பட மற்ற முதலீடுகளை சீனா செய்யும் என லிஷான் ஹூ கூறினார்.

மேலும் இலங்கையின் நெருங்கிய நண்பராக பொருளாதாரத்தை வலுப்படுத்த தனது முழு ஆதரவை வழங்குவோம் என சீன சபாநாயகர் உறுதியளித்தார்.

# கொரோனா நோயாளர்கள் வவுனியாவில் தப்பியோட்டம்

## கிராமத்தில் 32 பேருக்குத் தொற்று



வவுனியா தெற்கு சிங்கள சுகாதாரவைத்திய அதிகாரி பிரிவில் ஒரே கிராமத்தைச் சேர்ந்த 32 பேருக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த கிராமத்தைச் சேர்ந்த 3 பேர் சுகவீனம் காரணமாக வவுனியா வைத்தியசாலைக்குச் சென்றனர்.

அவர்களுக்கு முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டது.

எனினும் குறித்த நபர்கள் வைத்தியசாலையில் தங்காமல் தப்பிச்சென்றிருந்தனர்.

இது தொடர்பாக நடவடிக்கைகளை முன்னெடுத்த சுகாதாரப் பிரிவினர் குறித்த கிராமத்தில் தேடுதல் நடத்தி ஏழு பேரை தனிமைப்படுத்தியிருந்தனர்.

எனினும் தனிமைப்படுத்தப்பட்டவர்கள் அதனைக் கடைப்பிடிக்காமல் வெளியில் சுற்றித்திரிந்துள்ளனர்.

இது தொடர்பாக சுகாதாரப் பிரிவிற்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து குறித்த பகுதியைச் சேர்ந்த 150 பேரிடம் அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. இதன் போதே, அவர்களில் 32 பேருக்கு தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

# சீனி நெருக்கடிக்கு தீர்வு கரும்பு உற்பத்தி

## ஜானக வக்கும்புர தெரிவிப்பு

சீனி நெருக்கடிக்கு தீர்வாக இவ்வாண்டு கரும்பு உற்பத்திக் கிராமங்கள் பல அமைக்கப்படும் என கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

கரும்பு உற்பத்தி செய்யும் கிராமங்களை அமைக்கவும் கரும்புப் பாணி உற்பத்திக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கரும்பு பயிரிடக்கூடிய பகுதிகளை ஆராயுமாறு கரும்பு ஆராய்ச்சி நிறுவனத் தலைவரிடம் தெரிவித்தார் எனவும் ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

காலி, மாத்தறை, புத்தளம், கிளிநொச்சி மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் கரும்பு உற்பத்தி விரிவாக்கப்படும் என எதிர்பார்க்கிறேன் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.



# அமெரிக்காவில் கடும் மழையால் அவசர நிலை அறிவிக்கப்பட்டது

நியூயோர்க்கில் வரலாறு காணாத கனமழை பெய்து வரும் நிலையில், முதன்முறையாக தேசிய வானிலை சேவையால் திடீர் வெள்ள அவசரநிலை வெளியிடப்பட்டுள்ளது. இன்று (வியாழக்கிழமை) இரவுமுதல் அவசரநிலை அமுல்படுத்தப்படவுள்ளதாக மேயர் பில் டி பிளாசியோ அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், 'நியூயோர்க்கில் நேற்று இரவுமுதல் வரலாறு காணாத அளவில் வானிலை மோசமாக உள்ளது. மாகாணம் முழுவதும் பெய்த கனமழையால் வீதிகளில் வெள்ளநீர் சூழ்ந்து ஆபத்தான நிலை உருவாகியுள்ளது.

இதனால், இன்று இரவு முதல் அவசரநிலை அமுல்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

இதுவரை 5,300 வாடிக்கையாளர்கள் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதாக புகார் அளித்துள்ளனர்.

அடுத்த சில மணிநேரத்தில் மழை நிற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதையடுத்து மாகாணம் முழுவதும் மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஆகவே, சுரங்கப்பாதைகள் மற்றும் வீதியோரங்களில் யாரும் நிற்க வேண்டாம். அனைவரும் வீடுகளிலேயே இருக்க வேண்டும்' என தெரிவித்துள்ளார்.

ஐடா சூறாவளியைத் தொடர்ந்து நியூயோர்க் நகரம் மற்றும் ட்ரை-ஸ்டேட் பகுதி முழுவதும் வரலாற்று வெள்ளத்தை கண்டுள்ளன. நியூ ஜெர்சியில் ஒருவர் உயிரிழந்துள்ளார். குறுகிய காலத்தில் பெய்த கனமழை, சுரங்கப்பாதைகள் மற்றும் நெடுஞ்சாலைகளில் திடீர் வெள்ளத்திற்கு வழிவகுத்தது.

# பாக். பெண்களுக்கு அநீதி சமூக அமைப்புகள் கவலை

TRANSPARENCY INTERNATIONAL - PAKISTAN

பாகிஸ்தானில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து வருவதும் நாட்டில் அரசு மற்றும் நீதித்துறை முறையாக செயற்படாதது குறித்தும் அந்நாட்டை தளமாகக்கொண்ட பொது சமூக அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது.

டிரான்ஸ்பரன்சி இன்டர்நேனல், பாகிஸ்தான் துணைத் தலைவர் ஜஸ்டிஸ் ஆர். நசீரா இக்பால் இதனைத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் ஆண்களும், பெண்களும் தோளோடு தோள் சேர்ந்து பணியாற்ற வேண்டும் என நாட்டின் நிறுவனர் தந்தை முஹம்மது அலி ஜின்னா விரும்பிய போதும் அவருடைய பார்வையில் செயற்பட நாங்கள் தவறிவிட்டோம் என கூறியுள்ளார்.

ஒரு வளமான பாகிஸ்தானுக்கு பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவது மிகவும் முக்கியம் அதேவேளை பெண்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடுபவர்கள் சட்டத்தின்முன் நிறுத்தப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெண்களுடனான பாரபட்சமான நடத்தையை முடிவுக்குக் கொண்டுவர ஐ.நா. அளித்த வழிகாட்டுதல்களின் படி அரசாங்கம் செயற்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# ஈரானில் எகிறும் தொற்று

ஈரானில் கொரோனா வைரஸ் (கொவிட்-19) பெருந் தொற்றினால், மொத்தமாக 50 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளி விவரங்களின் படி, ஈரானில் 50 லட்சத்து 25ஆயிரத்து 233பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

உலகளவில் கொவிட் தொற்றினால் அதிக பாதிப்பினை எதிர்கொண்ட ஒன்பதாவது நாடாக விளங்கும் ஈரானில், இதுவரை ஒரு லட்சத்து எட்டாயிரத்து 393பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் வைரஸ் தொற்றினால், 33ஆயிரத்து 170பேர் பாதிக்கப்பட்டதோடு 599பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போதுவரை வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட ஆறு லட்சத்து 79ஆயிரத்து 525பேர் அங்குள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதில் ஏழாயிரத்து 860பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

அத்துடன் இதுவரை வைரஸ் தொற்றிலிருந்து மொத்தமாக 42 லட்சத்து 37ஆயிரத்து 315பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.



# தலிபான்களின் அரசில் பெண்களுக்கு இடமில்லை

ஆப்கானிஸ்தானில புதிய அரசாங்கத்தை அமைக்கவுள்ள தலிபான்கள், அந்த புதிய அரசாங்கத்தில் உயர் பதவிகளில் பெண்களுக்கு இடமில்லை என தெரிவித்துள்ளனர்.

இது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஆப்கானிய அரசாங்கத்துடனும், மக்கள் பிரதிநிதிகளுடனும் தலிபான்கள் பேசியதற்கு முரண்பட்டதாக உள்ளது.

முன்னதாக, ஜனாதிபதி, பிரதமர் தவிர மற்ற அனைத்துப் பதவிகளிலும் பெண்கள் இருப்பார்கள் என்றும் நிறுவனத் தலைவர்களாக இருக்கலாம் என்றும் அப்போது தலிபான்கள் கூறியிருந்தார்கள்.

இன்னும் ஓரிரு நாள்களில் ஆப்கானிஸ்தானில் புதிய அரசாங்கம் அமையும் என்று கட்டாரில் உள்ள அந்த அமைப்பின் அரசியல் பிரிவு துணைத் தலைவர் அப்பாஸ் ஸ்டானேக்ஷா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், 'பெண்களுக்கு உயர் நிலையில் பொறுப்புகள் வழங்கப்படாது. கீழ் நிலைப் பதவிகளில் அவர்களுக்கு இடம் அளிக்கப்படும்.

கடந்த இரு தசாப்தங்களில் அரசாங்கத்தில் பணியாற்றியவர்கள் யாரும் தலிபான்களின் அரசாங்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள்' என கூறினார்.

இதனிடையே, அனைவரையும் உள்ளடக்கிய அரசாங்கத்தை அமைத்து, அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்கு தலிபான்களுக்கு அழுத்தம் தர ஆப்கானிஸ்தானின் அண்டை நாடுகள் முயற்சி செய்து வருகின்றன.

# மூன்றாம் தடுப்பூசிப் பணி பிரான்ஸில் ஆரம்பமானது



மூன்றாம் அளவு கொவிட்-19 தடுப்பூசியை செலுத்துவதற்கான முன்பதிவு பிரான்ஸில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தப் பணிகளில், முதற்கட்டமாக 65 வயதிற்கு மேற்பட்டவர்கள், மற்றும் நோய் எதிர்ப்பின்மை, நோயுள்ளவர்கள் 60 லட்சம் பேர், தகுதி உள்ளவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களிற்கான முன்பதிவு மற்றும் ஊசிக்கான நேரங்களும் வெளியிடப்பட்டுள்ளது.

செப்டெம்பரின் இரண்டாவது வாரத்தில் இருந்து மூன்றாவது அளவு தடுப்பூசிகள் போட்டப்படும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

நோர்ட் மாவட்டத்தில், கடந்த வார இறுதி முதலே இந்த மூன்றாம் அலகுக் கொரோனாத் தடுப்பூசிகளிற்கான முன்பதிவுகள் ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனிடையே கர்ப்பிணிப் பெண்கள் கட்டாயம் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும் எனவும் கொரோனா தடுப்பூசிக்கும் கர்ப்ப காலத்துக்கும் எந்த ஒரு தொடர்பும் இல்லை என பிரான்ஸ் குழந்தைகளுக்கான நோயெதிர்ப்பு துறையின் பேராசிரியரும், உயிரியல் ஆராய்ச்சியாளரும் மருத்துவருமான அலைன் ஃபிர் தெரிவித்துள்ளார்

Study in UK
• Minimum Requirement : GCE O/L (London or Local)
• IELTS minimum 4.0 average preferred
• Can apply without IELTS too
• Foundation / Diploma / Bachelors / Masters Programs
• Easy Visa Procedure / 28 days Bank Balance only required.
• Choice of Many Universities – Inner and Outer London
• Part time work during term time / Full time work during holidays.
SIC Scholars Information Center
No. 527-1/1, First Floor, Galle Road, Wellawatte, Colombo 06.
Call : 0763 944 378

# சங்கத்தமிழ் இலக்கியங்களை 'திராவிடக்களஞ்சியம்' என வெளியிடுவதா? தமிழக அரசின் அறிவிப்புக்கு எதிராக தமிழ்த்தேசியவாதிகள் போர்க்கொடி






சங்கத்தமிழ் இலக்கியங்களைத் தொகுத்து அவற்றிற்கு 'திராவிடக் களஞ்சியம்' எனப்பெயர் சூட்டப்படுவதாக தமிழக அரசு அறிவித்திருப்பதற்கு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், தமிழ்த்தேசியப் பேரியக்கத்தின் தலைவர் பெ.மணியரசன், முக்குலத்தோர் புலிப்படைக் கட்சியின் தலைவர் கருணாஸ் உள்ளிட்ட பலரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அறிக்கை வெளியிட்ட சீமான், சங்கத்தமிழ் இலக்கியங்களைத் தொகுத்து அவற்றிற்கு 'திராவிடக் களஞ்சியம்' எனப்பெயர் சூட்டப்படுவதாக தமிழக அரசு அறிவித்திருப்பது பேரதிர்ச்சி தருகிறது. தமிழர்களின் அறிவுக்கொடைகளாக இருக்கும் பழந்தமிழ் இலக்கியங்களை, 'திராவிடக்களஞ்சியம்' என அடையாள மாற்றம் செய்ய முயலும் தி.மு.க. அரசின் செயல் தமிழினத்திற்கெதிரான மிகப்பெரும் மோசடித்தனமாகும்.

மனு ஸ்மிருதியிலிருந்து எடுத்தாளப்பட்ட வடசொல்லான, 'திராவிடம்' என்பதனைக் கொண்டு, ஆரியத்திற்கு நேரெதிராகத் தனித்துவத்தோடு நிற்கும் தன்னிகரில்லா தமிழ்மொழியையும், தமிழ்ப்பேரினத்தையும் அடையாளப் படுத்தும் இழிநிலைக்கெதிராகக் கருத்தியல் பரப்புரையும், போரும் நடத்திக் கொண்டிருக்கும் வேளையில், தமிழின் தொன்மக் களஞ்சியங்களையும் இல்லாத திராவிடத்தின் பெயரால் அடையாளப்படுத்தும் கொடுஞ்செயல் வன்மையான கண்டனத்திற்குரியது.

சங்க இலக்கியங்களிலோ, பழந்தமிழ் காப்பியங்களிலோ, தொன்ம இலக்கண இலக்கிய நூல்களிலோ என எங்கும் குறிக்கப்பெறாத 'திராவிடம்' எனும் திரிவுவாதச் சொல்லைக் கொண்டு தமிழ்க் களஞ்சியங்களைக் குறிப்பிடும் திராவிடத்திருட்டுத்தனம் வெட்கக் கேடானது. ஆகவே, சங்கத்தமிழ் இலக்கியங்களை 'திராவிடக்களஞ்சியம்' என அடையாளப்படுத்தும் கொடுந்தீங்கான இப்போக்கை உடனடியாகக் கைவிட்டு, அவற்றைத் 'தமிழ்க்களஞ்சியம்' என்றே குறிக்க வேண்டுமென அரசை வலியுறுத்துகிறேன் என தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக தமிழ்த்தேசியப் பேரியக்கத்தின் தலைவர் பெ.மணியரசன் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், சங்கத் தமிழ் இலக்கியங்களைச் சந்தி பிரித்து, எளிய தொகுப்பாக வெளியிடப்போகிறேன் என அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் அறிவித்துள்ளார். அந்த சங்கத் தமிழ்த் தொகுப்புக்கு திராவிடக்களஞ்சியம் என்று பெயர் சூட்டப்போகிறேன் எனவும் அதில் அறிவித்திருக்கிறார்.

சங்கத் தமிழ் நூல்கள் எதிலும் திராவிட என்ற சொல்லே கிடையாது. தமிழ், தமிழ்நாடு, தமிழகம் என்ற சொற்களே வரலாற்று உண்மை இவ்வாறிருக்க, வலிந்து சங்கத் தமிழ் நூல்களுக்கு திராவிடக் களஞ்சியம் என்று தி.மு.க. ஆட்சி பெயர் சூட்டுவதற்கு ஏதோ ஓர் உள்நோக்கம் இருக்க வேண்டும். எது எப்படி இருப்பினும், சங்கத் தமிழ் நூல்களைத் திராவிடக் களஞ்சியம் என்று மக்களிடம் அறிமுகப்படுத்துவது தமிழ் மொழி – தமிழினம் இரண்டையும் மறைக்கும் செயலாகும்! அவன் கையைக் கொண்டு அவன் கண்ணைக் குத்து! என்ற பழமொழிதான் நினைவுக்கு வருகிறது.

முதலமைச்சர் ஸ்டாலின் அண்மைக்காலமாக தமிழ் – தமிழர் – தமிழ்நாடு என்ற இயற்கையான சொற்களுக்கு மாற்றாக திராவிட என்ற வட சொல்லைப் புகுத்தி வருகிறார். தமிழ்நாட்டு வளர்ச்சியைக் குறிப்பதற்குக்கூட அவர் திராவிட மாதிரி என்று பெயர் சூட்டினார். விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திரு. தொல். திருமாவளவன் அவர்களுக்கு அண்மையில் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தபோது, ஸ்டாலின் அவர்கள் திராவிடச் சிறுத்தை என்று சிறப்புப் பெயர் சூட்டியதையும் இங்கு நினைவு கொள்ள வேண்டும். விடுதலை கட்சியைச் சேர்ந்த தோழர்கள் திருமாவளவன் அவர்களை எழுச்சித்தமிழர் என்று அழைக்கிறார்கள். அதை திராவிடச் சிறுத்தை என்று மாற்றுகிறார் ஸ்டாலின்!

அண்மையில் நடந்த சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் பரப்புரையில் திராவிடம், திராவிடர் என்ற சொற்களை அதிகம் பயன்படுத்தாமல், தமிழர் என்ற சொல்லையே அதிகம் பயன்படுத்தினார் ஸ்டாலின். ஆனால், முதலமைச்சராக பதவியேற்றவுடன் நான் திராவிட இனத்தைச் சேர்ந்தவன் (I belong to Dravidian Stock) என்று அறிவித்துக் கொண்டார். தமிழர்களிடம் வாக்கினை பெறும் வரை அவர்களின் அசல் இனப் பெயரைச் சொல்லுவது, வாக்கு வாங்கி வெற்றி பெற்றபின் திராவிடத்தை திணிப்பது என்ற தந்திரமாகத்தானே இதைப் பார்க்க முடிகிறது?

தமிழ்நாட்டில் விஜயநகர மன்னர்கள் ஆட்சிக்குப் பிறகு வந்த தமிழ் இலக்கியங்களில்தான் திராவிட என்ற சொல் இருக்கிறது. அசலாக திராவிட என்ற சொல்லை உருவாக்கியவர்கள் ஆரியர்கள். தென்னக மொழிகளின் ஒப்பிலக்கணம் எழுதிய கால்டுவெல் திராவிட என்ற சொல்லை சமஸ்கிருத நூல்களான மனுதர்மத்திலிருந்தும், குமாரிலபட்டரின் தந்திரவார்த்திகா நூலிலிருந்தும் எடுத்துக்கொண்டதாகவும் இன்னும் உள்புகுந்து பார்த்தால், தென்னகப் பகுதிகளில் குடியேறிய பிராமணர்களை அழைக்க திராவிடர் என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தென்னக பிராமணர்கள் – திராவிடர்கள் வடநாட்டுப் பிராமணர்கள் – கௌடர்கள். இதுதான் வரலாறு!

தமிழ் இன உணர்வும், தமிழ்த்தேசியமும் வளர்ந்து வரும் இக்காலத்தில் தமிழ் – தமிழினப் பெருமிதங்களை திராவிட மாயையில் மறைக்கும் செயலை இனிமேலாவது தி.மு.க. கைவிட்டால் நல்லது. திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ள தமிழறிஞர்களும், இன உணர்ச்சியுள்ள தமிழர்களும் தலைமைக்கு இதையெல்லாம் சுட்டிக்காட்டி, தமிழை திராவிடமாகத் திரிக்கும் வேலையை கைவிடச் செய்யவேண்டும்.

தமிழர்களின் இந்த வேண்டுகோளைப் புறக்கணித்து, சங்கத் தமிழ் நூல்களை பிடிவாதமாக திராவிடக் களஞ்சியம் என்ற பெயரில் வெளியிட்டால், அதற்கு எதிராக தமிழர்கள் கருத்தைத் திரட்டி அறவழிப் போராட்டம் நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்பதைத் தமிழ்த்தேசியப் பேரியக்கம் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன் எனத்தெரிவித்திருக்கிறார்.

# ஜல்லிக்கட்டில் நாட்டு மாடுகளுக்கே அனுமதி அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு

ஜல்லிக்கட்டு போட்டிகளில் நாட்டு மாடுகளை மட்டுமே அனுமதிக்க வேண்டும் என தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை ஒக்கியம் துரைப்பாக்கத்தைச் சேர்ந்த சேன் என்பவர் தாக்கல் செய்த மனுவில், ஜல்லிக்கட்டு போட்டிகளில் நாட்டு இன மாடுகளை மட்டும் அனுமதிக்க உத்தரவிட வேண்டும் எனவும், வெளிநாட்டு மற்றும் கலப்பின மாடுகள் பங்கேற்க தடை விதிக்க வேண்டும் எனவும் கோரியிருந்தார். அந்த மனுவில், நாட்டு மாடுகளுக்கு திமில் இருக்கும் என்பதால் அதனை ஜல்லிக்கட்டு வீரர்கள் பிடிக்க வசதியாக இருக்கும் எனவும், வெளிநாட்டு மற்றும் கலப்பின மாடுகளுக்கு திமில் இருப்பதில்லை எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.



இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் கிருபாகரன் மற்றும் வேல்முருகன் அடங்கிய அமர்வு, ஜல்லிக்கட்டு போட்டிகளுக்கு அனுமதியளிக்கும் வகையில் 2017 இல் பிறப்பிக்கப்பட்ட சட்டத் திருத்தத்தில், நாட்டு மாடுகளைப் பாதுகாக்கும் வகையிலும், தமிழக கலாச்சாரம், பண்பாட்டை பாதுகாக்கும் வகையிலும் இந்தச்சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டினர்.

வெளிநாட்டு மாடுகள் ஜல்லிக்கட்டில் கலந்துகொள்ள தடையில்லை என்ற அரசுத்தரப்பு வாதத்தை நிராகரித்த நீதிபதிகள், ஜல்லிக்கட்டுப் போட்டிகளில் நாட்டு மாடுகள் மட்டுமே பங்கேற்க அனுமதிக்க வேண்டும் எனவும், வெளிநாட்டு மாடுகள், கலப்பின மாடுகளைப் பங்கேற்க அனுமதிக்கக்கூடாது எனவும் உத்தரவிட்டனர்.

ஜல்லிக்கட்டில் பங்கேற்கும் மாடுகள் நாட்டு மாடுகள் என கால்நடை மருத்துவர்கள் சான்றளிக்க வேண்டும் எனவும், பொய்ச் சான்றிதழ் அளித்தால், சம்பந்தப்பட்டவர்கள் மீது நீதிமன்ற அவமதிப்பு உள்ளிட்ட நடவடிக்கைகளை எடுக்கலாம் என நீதிபதிகள் உத்தரவிட்டனர். நாட்டு மாடுகள் இனப்பெருக்கத்துக்கு ஊக்கம் அளிக்க அரசுக்கு ஆலோசனை வழங்கிய நீதிபதிகள், மாடுகளுக்கு செயற்கைக் கருத்தரித்தல் முறையை தவிர்க்க வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளனர்.



# மருத்துவத் துறைக்கான நீட் தேர்வைத் தவிர்ப்பதற்கு புதிய சட்டம் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற தமிழக அரசு நடவடிக்கை

நீட் தேர்வை தவிர்ப்பதற்கான புதிய சட்டத்திற்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற தமிழ்நாட்டு அரசினால் நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மருத்துவத் துறைச் சேர்க்கைக்கான தேசிய நுழைவுத் தேர்வுக்கு எதிர்ப்பு என்று தனது கொள்கை விளக்கக் குறிப்பில் தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

மருத்துவப் படிப்புகளுக்கான தேசிய நுழைவுத் தேர்வுக்கு (நீட்) தமிழ்நாடு அரசு தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. அதனடிப்படையில் மருத்துவப் படிப்பிற்கான இடங்கள் ஏழை மாணவர்களுக்குக் கிடைப்பதில் உள்ள சிரமங்களைக் கருத்தில் கொண்டு அமைக்கப்பட்டது.

அந்தக் குழுவின் முடிவின் அடிப்படையில், தமிழக அரசு இன்று இந்த கொள்கை விளக்கக் குறிப்பை வெளியிட்டுள்ளது. இந்தக் குறிப்பில், 'நீட் தேர்வை புறந்தள்ள தமிழ்நாடு மாநிலச் சட்டம் 3/2007 இனைப் போன்றதொரு புதிய சட்டத்தினை இயற்றி, குடியரசுத் தலைவரது ஒப்புதலைப் பெற முயற்சிக்கலாம் என குழு பரிந்துரைத்துள்ளது' என இந்தக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கை அரசுதரப்பில் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மருத்துவக் கல்வி முறைகளில் பாகுபாடு காட்டப்படுவதைத் தடுக்கவும், அந்தப் பாகுபாட்டினால் ஒதுக்கப்படும் மற்றும் பாதிக்கப்படும் மாணவச் சமுதாயத்திற்கான சமூக நீதி பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்ய முடியும் எனவும் தமிழக அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# இந்தியாவில் வசிக்கும் இலங்கை மக்களின் நலனுக்கான நிதி ஒதுக்கீடு; நாங்கள் சந்தோசமடைகின்றோம் என்கிறார் கூட்டமைப்பு கலையரசன்



இலங்கையில் இருந்து இந்தியாவில் புலம்பெயர்ந்து வாழுகின்ற எமது மக்களின் நலனுக்காக தமிழ்நாடு முதல்வர் பெருந்தொகை நிதியை ஒதுக்கீடு செய்துள்ள விடயத்திற்கு நாங்கள் சந்தோசம் அடைகின்றோம். அவருக்கு எமது வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகளின் மீள் வருகை தொடர்பில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கூறிய கருத்து வேடிக்கையானது என்றும் ஏனெனில் இந்த அரசாங்கத்திடம் எமது மக்களை மீள அழைத்து குடியமர்த்த வேண்டும் என்ற திட்டங்கள் எதுவுமில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்

இந்தியாவில் வசிக்கும் இலங்கையர்கள் நலனுக்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 317 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு மேற்கொண்டுள்ளமை தொடர்பிலும் புலம்பெயர் உறவுகளின் மீள் வருகை தொடர்பில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வெளியிட்ட அறிக்கை தொடர்பிலும் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் யுத்தம் காரணமாக மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு இந்த நாட்டில் வாழ முடியாமல் இந்தியாவிற்குச் சென்று அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் எமது உறவுகளின் நலனுக்காக தமிழ்நாடு முதலமைச்சர் பாரிய நிதியினை ஒதுக்கீடு செய்துள்ள விடயம் உண்மையிலேயே வரவேற்கத்தக்கதும், மகிழ்ச்சிகரமானதுமாகும்.

எமது தொப்புல்கொடி உறவுகளாக இந்தியா இருந்துகொண்டு இந்த நாட்டில் தமிழர்கள் தொடர்பான விடயத்தில் கூடுதலான கவனம் எடுத்து எமது மக்களின் இருப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்று பல முன்னெடுப்புகளைச் செய்திருக்கின்றது. இருப்பினும் இந்த அரசாங்கத்தால் அது முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படாமல் இருக்கின்றது.

குறிப்பாக 13வது திருத்தச் சட்டம் கூட இந்திய இலங்கை ஒப்பந்தம் என்ற அடிப்படையில் இருப்பதன் காரணமாக இன்று அந்தச் சட்டத்தில் கை வைப்பதில் இந்த அரசாங்கம் தயக்கம் காட்டுகின்றது.

குறிப்பாக இந்த அரசாங்கத்தில் இருக்கின்ற பெரும்பாலான அமைச்சர்கள் இந்தியாவின் அனுசரணையுடன் கொண்டு வரப்பட்ட இந்த மாகாணசபை முறைமையை இல்லாமல் செய்வதற்குரிய பணிகளை முன்னெடுத்து வருகின்றார்கள். மாகாணசபை முறைமை பொருத்தமற்றது என்ற கருத்துகளைக் கூட அவர்கள் முன்வைத்திருக்கின்றார்கள். இவ்வாறு அவர்கள் முன்வைக்கின்ற ஒவ்வொரு விடயங்களும் இலங்கையில் இருக்கின்ற தமிழர்களையும், தமிழர்களின் பலத்தையும் இல்லாமல் செய்வதற்கான நிகழ்ச்சி நிரலாகவே இருக்கின்றது.

அந்த அடிப்படையில் இலங்கையில் இருந்து இந்தியாவில் புலம்பெயர்ந்து அகதிகளாக வாழுகின்ற எமது மக்களின் நலனுக்காக தமிழநாடு முதல்வர் பெருந்தொகைநிதியைஒதுக்கீடுசெய்துள்ள விடயத்திற்கு நாங்கள் மிகவும் சந்தோசம் அடைகின்றோம். அவருக்கு எமது வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம்.

அதே நேரம் இந்த நாட்டிலே தற்போதைய விளையாட்டுத்துறை அமைச்சராக இருக்கின்ற நாமல் ராஜபக்ஷ அவர்கள் யுத்தத்தினால் இந்த நாட்டை விட்டுச் சென்றவர்கள் மீள இங்கு வருகின்ற போது அவர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துவது பற்றி கருத்துத் தெரிவித்திருக்கின்றார். உண்மையில் அவருடைய கருத்தானது ஒரு வேடிக்கையான கருத்தாகவே இருக்கின்றது.

தேர்தல் காலங்களில் இவரால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் பலவுண்டு. அதில் கவரப்பட்டு எமது இளைஞர்கள் பலரும் அவரின் பின்னால் பயணித்திருந்தார்கள். அவ்வாறு முன்வைத்த வாக்குறுதிகளேஇன்னும்நிறைவேற்றப்படாத ஒரு நிலைமையிலே வெளிநாடுகளில் அகதிகளாக இருக்கும் எமது மக்களின் பாதுகாப்பு சம்பந்தமாக கருத்துகளை அவர் கூறியிருப்பது உண்மையிலேயே ஏற்றுக்கொள்ளப்பட முடியாத விடயம்.

ஏனெனில் இந்த நாட்டிலே இருந்து இந்தியாவிற்குச் சென்ற எமது மக்களை யுத்தம்முடிந்துபன்னிரண்டுவருடங்களிலே அவர்களை மீளக் குடியமர்த்துவதற்கான ஏதாவதொரு பணியை இந்த அரசாங்கம் முன்னெடுத்திருக்கின்றதா. மீள நாட்டுக்கு வந்தவர்களுக்கான அடிப்படை வசதிகளே இன்னும் செய்து கொடுக்கப்படவில்லை.

இலங்கைக்கு மீள வருபவர்களுக்கு எவ்வித அடிப்படை வசதிகளும் பூர்த்தி செய்து தரப்படவில்லை, இங்கு வந்தவர்களை மேலும் அடிமையாக்குகின்ற விடயத்தையே அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. மீள இலங்கைக்கு வரவேண்டாம் என்ற கருத்துக்களை இந்தியாவில்உள்ளமக்களுக்கு மீளவந்தவர்கள் தெரியப்படுத்தியிருக்கின்றார்கள்.

இதன் நிமித்தம் நாங்கள் அந்த மக்களுடன் கலந்துரையாடும் போது இந்தியாவில் நாங்கள் பாதுகாப்பாக இருக்கின்றோம். இலங்கைக்கு நாங்கள் மீள வந்தால் அந்தப் பாதுகாப்பினை அரசாங்கத்தினால் ஏற்படுத்தித் தர முடியுமா என்ற கேள்வியையே அவர்கள் எங்களிடம் முன்வைக்கின்றார்கள்.

அந்த மக்கள் கோரும் பாதுகாப்பு இங்கு கிடைக்குமா என்பது கேள்விக் குறியே. ஏனெனில் பாதுகாப்பு இல்லாத காரணத்தினாலேயே அவர்கள் இந்தியாவிற்குச் சென்றிருந்தார்கள். அவர்கள் இங்கு மீள வருகின்ற போது அவர்களின் இடங்களில் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும், அவர்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும், அத்துடன் அவர்களின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயத்திலும் இந்த அரசாங்கம் பூரணமான உறுதிமொழியை வழங்க வேண்டும். அவ்வாறு வழங்காமல் வெறுமனே அவர்களை இங்கு அழைக்கின்ற விடயம் ஏற்புடையதாக இருக்காது.

தற்போதைய இந்த அரசாங்கம் இலங்கையில் தமிழர்களின் விகிதாசாரத்தைக் குறைக்க வேண்டும் என்கின்ற நிகழ்ச்சி நிரலை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. அதன் நிமித்தம் எமது வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள நிலைமைகளும் இருக்கின்றன. இது இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளின் விளைவே. எனவே அமைச்சர் நாமலின் கருத்து மக்களைக் கவருவதற்காகக் கூறப்பட்ட ஒன்றாக இருக்கின்றதே தவிர ஆக்கபூர்வமான கருத்தாகப் பார்க்க முடியாது. ஏனெனில் இந்த அரசாங்கத்திடம் எமது மக்களை மீள அழைத்து குடியமர்த்த வேண்டும் என்ற திட்டங்கள் எதுவுமில்லை. தூய நோக்கத்தோடு செயற்படுகின்ற அரசாங்கமாகவும் இது இல்லை என்று தெரிவித்தார்.




# மட்டு. மாவட்டத்தில் பல கோடி ரூபாவில் கொவிட் நவீன தீவிர சிகிச்சைப் பிரிவு

மட்டக்களப்பு மாவட்டத்தில் முதன் முதலாக பல கோடி ரூபா செலவில் கொவிட் நோயாளிகளுக்கான நவீன அதி தீவிர சிகிச்சைப் பிரிவானது களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் புவனேந்திரநாதன் தெரிவித்தார்.

ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க வேலைகள் அனைத்தும் வைத்திய அத்தியட்சகர் தலைமையில் நேற்று நடைபெற்றன.

இதன்போது பொது வைத்திய நிபுணர்கள், மயக்க மருந்து வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள் பலரும் ஆர்வத்துடன் ஈடுபட்டதனை அவதானிக்கக கூடியாதாக இருந்தது. இந்த தீவிர சிகிச்சை பிரிவானது கொரோனா நோயினால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட நோயாளிகளை வைத்து அதி தீவிர சிகிச்சையளிக்கும் பிரிவாக அமைக்கப்பட்டுள்ளது.

ஒரே தடவையில் 6 நோயாளிகளை வைத்து சிகிச்சையளிக்கக் கூடியவிதத்தில் இச் சிகிச்சை பிரிவு அமையப் பெற்றுள்ளதுடன், நோயாளிக்கு அண்மையில் இருந்து சிகிச்சை வழங்குவதற்கான வைத்திய துறையில் அதி நவீன முறைகளில் ஒன்றான வைரஸ் கிருமிகளுக்கு எதிர் மறை அழுத்தம் கொடுக்கக் கூடிய (pressure room) இந்த சிகிச்சை கூடம் அமையப் பெற்றுள்ளமை சிறப்பம்சமாகும். குறித்த சிகிச்சை பிரிவை அமைப்பதற்கு பல கோடி ரூபாக்கள் செலவு செய்யப்பட்டுள்ளதுடன். இவ்வாறான சிகிச்சை கூடங்கள் இலங்கையில் ஒரு சில மாவட்டங்களிலையே அமையப்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான சிறப்பம்சங்களைக் கொண்ட சிகிச்சை பிரிவானது 01.09.2021 திகதி தொடக்கம் உத்தியோகபூர்வமாக இயங்குகின்றமையுடன் எமது பிரதேச மக்களுக்கு இது வொரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது எனவும் அத்தியட்சகர் இதன் போது மேலும் தெரிவித்தார்.

# கண்ணபுரம் கிழக்கு கிராமத்தில் காட்டு யானைகளால் தொல்லை

மட்டக்களப்பு வெல்லாவெளி பிரதேசத்தின் எல்லைப்புறக் கிராமமான கண்ணபுரம் கிழக்கு கிராமத்தில் நேற்று புதன்கிழமை அதிகாலை 2 மணியளவில் புகுந்த 2 காட்டு யானைகள் கிராம மக்களால் செய்கை பண்ணப்பட்டிருந்த மரவள்ளி, தென்னை, மா போன்ற பயிர்களையும் அழித்துத் துவம்சம் செய்துவிட்டுச் சென்றுள்ளன என அக்கிராமவாசிகள் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 8 மணியளவில் அக்கிராமத்திற்குள் புகுந்த 2 காட்டுயானைகள் அங்கி ருந்து பயிர்களை துவம்சம் செய்தவேளை மக்கள் ஒன்றுகூடி தீப்பந்தம் ஏந்தியும், பட்டாசு கொழுத்தியும், உரத்த குரலில் சத்தமிட்டும், விரட்டியுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தின் படு வாங்கரைப் பகுதியில் மிக நீண்ட காலமாகவிருந்து காட்டு யானைகளின் அட்டகாசங்களும், தொல்லைகளும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# சிறப்பாகச் செயற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனுக்குக் கிடைத்தது முதலாவது இடம்




நாடாளுமன்றத்தில் சிறப்பாக செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான தரவரிசையினை மந்திரி.எல்கே என்ற இணையத்தளம் வெளியிட்டு வருகின்றது. இந்தநிலையில் தற்போது புதிய தரப்படுத்தல் பட்டியலினை குறித்த இணையத்தளம் வெளியிட்டுள்ளது.

புதிய தரப்படுத்தலில் இரா.சாணக்கியன் முதல் இடத்தினை பிடித்துள்ளதுடன், அமைச்சர் சரத் வீரசேகர இரண்டாவது இடத்தினையும், புத்திக பத்திரன மூன்றாவது இடத்தினையும் பிடித்துள்ளனர்.

# ப்ரோ கபடி பிறீமியர் லீக் ஏலத்தில் இலங்கை வீரர் தெரிவு




உலகின் முன்னணி கபடி லீக் தொடரான இந்தியன் ப்ரோ கபடி பிறீமியர் லீக்கின் வீரர்கள் ஏலத்தில் முதல் முறையாக இலங்கையைச் சேர்ந்த வீரர் ஒருவர் வாங்கப்பட்டுள்ளார். இலங்கைக் கடற்படை அணியைச் சேர்ந்த 25 வயதான அன்வர் சஹீப் பாபா என்ற வீரரே தமிழ் தலைவாஸ் அணியால் ஏலத்தில் எடுக்கப்பட்டுள்ளார்.

எட்டாவது இந்தியன் ப்ரோ கபடி பிறீமியர் லீக் வீரர்கள் ஏலம் நேற்றுமுன்தினம் மும்பையில் நடைபெற்றது. இந்த ஏலத்தில் இலங்கையைச் சேர்ந்த அன்வர் சஹீப், லஹிரு குறுப்பு, ஆசிரி சந்தருவன் மற்றும் அஸ்லம் சஜா ஆகிய வீரர்கள் இடம்பெற்றிருந்தனர்.

முதல்கட்ட ஏலத்தில் இலங்கை வீரர் அன்வர் சஹீட் பாபாவை தமிழ் தலைவாஸ் அணி இந்திய நாணய மதிப்பில் 10 லட்சம் ரூபாவுக்கு ஏலத்தில் எடுத்துள்ளது. இந்தியன் ப்ரோ கபடி பிறீமியர் லீக் வரலாற்றில் வீரர்களுக்கான ஏலத்தின் மூலம் உள்வாங்கப்பட்ட இலங்கை வீரர் என்ற பெருமையை அவர் பெற்றுக்கொண்டார். எம்பிலிபிட்டிய ஜனாதிபதி வித்தியாலயத்தின் பழைய மாணவரான அன்வர் சஹீட், தற்போது இலங்கைக் கடற்படை கபடி அணிக்காக விளையாடி வருகின்றார்.

இதற்கு முன்னதாக இந்தியன் ப்ரோ கபடி லீக்கில் இலங்கையிலிருந்து இரண்டு வீரர்கள் பங்குபற்றியுள்ளனர்.

2014ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் ஆரம்பமாகிய இந்தியன் ப்ரோ கபடி பிறீமியர் லீக் தொடரில் மட்டக்களப்பைச் சேர்ந்த கணேசராஜா சினோதரன் பெங்களூர் புள்ஸ் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டு வெளிநாட்டு கபடி லீக் தொடரில் பங்குபற்றிய முதல் இலங்கை வீரர் என்றபெருமையையும்அவர்பெற்றுக்கொண்டார். 2014 முதல் 2018 வரை தொடர்ந்து 5 வருடங்கள் பெங்களூர் புள்ஸ் அணிக்காக விளையாடிய சினோதரனுக்கு காலில் ஏற்பட்ட காயம் காரணமாக 2019 இல் நடைபெற்ற தொடரில் விளையாட முடியாமல் போயிருந்தது.

இலங்கை சார்பாக இம்முறை ஏலத்தில் இடம்பெற்ற ஏனைய மூன்று வீரர்களும் இரண்டாம் கட்ட ஏலத்தில் மீண்டும் இடம்பெறுவார்கள். 12 அணிகள் பங்குபற்றும் இந்தியன் ப்ரோ கபடி பிறீமியர் லீக் தொடர் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

## கரீபியன் பிறீமியர் லீக் தொடரில் ஸ்மார்ட் கிரிக்கெட் பந்து



கிரிக்கெட் வரலாற்றில் முதன்முறையாக கரீபியன் பிறீமியர் லீக் தொடரில் ஸ்மார்ட் பந்து உபயோகிக்கப்படுகிறது. கூக்கபுரா நிறுவனத்தின் தயாரிப்பான இந்த ஸ்மார்ட் பந்தில் பொருத்தப்பட்டுள்ள இலத்திரனியல் கருவியானது பந்தினது வேகம், பந்து சுழலும் கோணம் போன்றதகவல்களைஅதனோடு பிணைக்கப்பட்டுள்ள கணினிக்கோ அல்லது ஸ்மார்ட் உடனடியாக வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கின்றது.

பந்து வீசும் போது அது தரையில்பட முன்னர் இருந்த வேகத்தினையும் சுழல் கோணத்தினையும், தரையில் பட்டதன் பின்னர் இருந்த வேகத்தினையும், சுழல் கோணத்தினையும் அவதானிக்கக்கூடிய சிறப்பு ஆற்றல்கள் இந்த ஸ்மார்ட் கிரிக்கெட் பந்தில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு பந்துவீச்சாளர் பந்துவீசும்போது செலவிட்டஆற்றலின்அளவினைக் கணிக்கும்திறனும்இந்தஸ்மார்ட் பந்தில் உள்ள டக்கப்பட்டுள்ளது. பரீட்சார்த்தமாக தற்போது கரீபியன் பிறீமியர் லீக் போட்டிகளில் இந்த ஸ்மார்ட் கிரிக்கெட் பந்தானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. விரைவில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலும் பயன்படுத் தப்படலாம்எனஎதிர்பார்க்கப்படுகின்றது.

## நியூசிலாந்தை 60 ஓட்டங்களில் சுருட்டிய பங்களாதேஷ் முதலாவது ரி-20 வெற்றியையும் பதிவு செய்தது



நியூசிலாந்துக்கு எதிரான தொடரின் முதலாவதுரி-20கிரிக்கெட்போட்டியில்7விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணி வென்றுள்ளது.

பங்களாதேஷில் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி, 5 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. தொடரின் முதலாவது போட்டி டாக்காவில் நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சைச் சமாளிக்க முடியாது தடுமாறிய நியூசிலாந்து, 16.5 ஓவர்களில் 60 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. அணித்தலைவர் டொம் லதமும் ஹென்றி நிகோல்சும் அதிகபட்சமாக தலா 18 ஓட்டங்களை எடுத்தார்கள். பங்களாதேஷ் அணியின் முஸ்டபிசுர் ரஹ்மான் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி 15 ஓவர்களில் 3 விக்கெட்களை மட்டும் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. முஷ்பிகுர் ரஹிம் 16, மஹ்மதுல்லா 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்து வெற்றியை உறுதிப்படுத்தினர். ரி-20 போட்டிகளில் முதன்முறையாக நியூசிலாந்து அணியை பங்களாதேஷ் வென்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ரி-20 போட்டி வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

கடந்த மாதம் ஆஸ்திரேலிய அணிக்கெதிராக நடைபெற்றரி-20போட்டியில்62ஓட்டங்களுக்கு அந்த அணியை வீழ்த்தியிருந்ததோடு, அந்தத் தொடரில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது ரி-20 வெற்றியோடு தொடரையும் கைப்பற்றியிருந்தது.



## அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் இரண்டாவது சுற்று ஆரம்பம்



அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றுப் போட்டியில், கிரேக்கத்தின் ஸ்டெபீனோஸ் சிட்ஸிபாஸ், பிரான்ஸின் அட்ரியன் மன்னாரினோவை 6-3, 6-4, 6-7, 6-0 என்ற செட் கணக்குகளில் வெற்றிபெற்று மூன்றாவது தகுதிபெற்றார்.

ஆர்ஜெண்டினாவின் டியாகோ ஸ்வார்ட்ஸ்மேனும், தென்னாபிரிக்காவின் கெவீன் எண்டர்சனும் விளையாடிய போட்டியில், டியாகோ ஸ்வார்ட்ஸ்மேன், 7-6, 6-3, 6-4 என்ற நேர் செட் கணக்குகளில் வெற்றிபெற்று மூன்றாவது சுற்றுக்குள் நுழைந்தார்.

பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றுப் போட்டியில், அமெரிக்காவின் ஸ்லோன் ஸ்டீபன்சும், சகநாட்டு வீராங்கனையான கோகோ கோஃப்பும் மோதினர். இப்போட்டியில், 6-4, 6-2 என்ற நேர் செட் கணக்குகளில் ஸ்லோன் ஸ்டீபன்ஸ் வெற்றிபெற்று மூன்றாவது சுற்றுக்குத் தெரிவாகியுள்ளார்.

# நாட்டை முடக்குவதால் கொவிட் கட்டுப்படாது!

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

நாட்டை முடக்குவதால் மட்டும் கொரோனாத் தொற்றினைக் கட்டுப்படுத்த முடியாது என்றும் எனவே இதில் பொதுமக்களின் ஒத்துழைப்பு வேண்டும் என வும் சுகாதார அமைச்சு தெரி வித்துள்ளது.



தற்போதுள்ள முடக்க கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதும் பயணக் கட்டுப்பாடுகள் கடுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

நாட்டை முடக்குவதன் மூலம் மட்டுமே இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது ஏனெனில் முடக்கம் பரவலைக் கட்டுப்படுத்த ஒரு வழியில் மாத்திரமே உதவும் எனவும் கூறினார். மக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றவில்லை என்றால் நாட்டை முடக்குவது அர்த்தமற்றதாகி விடும் என குறிப்பிட்ட அவர் வீதிகளில் தற்போது பயணிக்கின்ற வாகனங்கள் தொடர்பாகவும் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் முடக்கக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதும் போக்குவரத்து, வணிக நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் மக்கள் ஒன்றுகூடுவதைத் தடுக்க பொறுப்பான அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

# அரிசி, சீனியின் விலையை கட்டுப்படுத்த நடவடிக்கை

அரிசி மற்றும் சீனிக்கு அதிகபட்ச சில்லறை விலை அறிவிக்கப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர்லசந்தஅழகியவன்ன தெரிவித்துள்ளார். அதன்படி, இன்று (வியாழக்கிழமை) முதல் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டத்தில் வலுவான திருத்தங்களை மேற்கொண்டு, நிர்ணய விலையை விடவும் அதிக விலைக்கு அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்வோருக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



# அமைச்சர் பீரிஸ் உடனான சந்திப்பை புறக்கணித்தார் கொழும்பு பேராயர்

சில நிபந்தனைகள் நிறைவேற்றப்படும் வரை வெளிவிவகாரஅமைச்சர்பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் உடனான சந்திப்பை புறக்கணிப்பேன் என கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

சந்திப்பொன்றுக்கு கோரிக்கை விடுத்து வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் கடிதமொன்றை பேராயருக்கு அனுப்பியிருந்தார் என அருட்தந்தை சிரில் காமினி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சில நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால் சந்திப்பிற்கு தயாராக இருக்கிறேன் எனவும் நிபந் தனைகள் நிறைவேறும் வரை அமைச்சரை சந்திக்க மாட்டோம் என்றும் கர்தினால் பதிலளித்துள்ளார் என அருட்தந்தை சிரில் காமினி பெர்னாண்டோ கூறினார்.

இந்நிலையில் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் பொதுமக்களின் நம்பிக்கையைப் பெறும் வகையில் நடத்தப்பட வேண்டும் என கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை ஜி.எல். பீரிஸிற்கு அறிவித்துள்ளார்.

அத்தோடு கத்தோலிக்க சமூகம் மற்றும் பொது மக்களின் நம்பிக்கையைப் பெற, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் உள்ள பரிந்துரைகளை அரசாங்கம் அமுல்படுத்த வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

மேலும் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக பொலிஸ் உயர் மட்ட அதிகாரிகள் உட்பட பலர் ஊடகங்களில் அண்மையில் வெளியிடப்பட்ட கருத்துக்கள் தாக்குதல்கள் மீதான விசாரணையில் நம்பிக்கையை வெளிப்படுத்தவில்லை என்றும் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை சுட்டிக்காட்டியுள்ளார்.

# தென்னாபிரிக்க புதிய மாறுபாடு இங்கு நுழைவதற்கான வாய்ப்பு?

## வைத்தியர் ஹேமந்த

தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்ட புதிய கொரோனா மாறுபாடு எந்த நேரத்திலும் இலங்கைக்குள் நுழையலாம் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

அவ்வாறு வைரஸ் நாட்டுக்குள் நுழைவதைத் தடுக்க உலகில் வேறு எந்தப் பொறிமுறையும் இல்லை என்றும் அவர் கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களிடம் தெரிவித்துள்ள அவர் -

சோதனைக்காக எடுக்கப்பட்ட மாதிரி மூலம் கண்டறியப்பட்டால் மட்டுமே நாட்டில் ஒரு புதிய மாறுபாடு அடையாளம் காணமுடியும் எனத் தெரிவித்தார். எந்தவொரு கொரோனா மாறுபாடும் இலங்கைக்குள் நுழையலாம் என்றும் அதைத் தடுக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

பிரச்சினை என்னவென்றால், குறிப்பிட்ட மாறுபாடு நாட்டில் பரவிய பிறகு ஒரு மாதிரி மூலம் கண்டறியப்பட்டால் மட்டுமே இலங்கைக்குள் அந்த மாறுபாடு நுழைந்துள்ளது என்பதை நாம் அறிய முடியும் எனத் தெரிவித்தார்.

ஏனெனில், நாம் முன்கூட்டியே அறிந்து கொண்டு அந்த மாறுபாடு ஒரு நாட்டிற்குள் நுழைவதை நிறுத்தவும் முடியாது என்றும் அவர் கூறினார். சீ 12 என்ற குறித்த கொரோனா வைரஸ் திரிவு தென்னாபிரிக்காவில் பரவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நெல் களஞ்சியசாலைகள் இரண்டுக்கு வவுனியாவில் சீல்

வவுனியா தாண்டிக்குளம் மற்றும் கொறவப்பொத்தானை வீதிகளில் அமைந்துள்ள இரண்டு தனியார் நெற்களஞ்சியசாலைகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது. நாட்டில் கொரோனாத் தொற்று பரவலடைந்து வரும் நிலையில், உணவுப்பொருள்களின் விலையும் அதிகரித்து வருகின்றது. இந்த நிலையில் நாட்டிலுள்ள தனியார் நெற்களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள நெல் தொடர்பான தகவல்களை வழங்குமாறு அரசாங்கம் அறிவித்திருந்தது. எனினும் அரசால் அறிவிக்கப்பட்ட கால எல்லைக்குள் குறித்த தகவல்களை வழங்காத இரண்டு நெற்களஞ்சியசாலைகளுக்கு வவுனியா மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை உத்தியோகத்தர்களால் சீல் வைக்கப்பட்டது. இந்த நிலையில், குறித்த களஞ்சியசாலைகளில் உள்ள நெல்லை நெல் சந்தைப்படுத்தும் சபையால் நிர்ணய விலையைச் செலுத்தி கொள்வனவு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தர்மரின் 36 ஆவது நினைவு இன்று தாவடியில் அனுஷ்டிப்பு



தமிழர் அரசியலில் தவிர்க்க முடியாத செல்வாக்குமிக்க தலைவர் வி.தர்மலிங்கத்தின் 36 ஆவது நினைவு தினம் இன்று (வியாழக்கிழமை) அனுஷ்டிக்கப்பட்டது. தாவடியில் உள்ள தர்மலிங்கத்தின் நினைவு சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. நாட்டில் அமுலிலுள்ள பயணத் தடை காரணமாக மட்டுப்படுத்தப்பட்டவர்களின் பங்குபற்றுதலோடு, சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றி, நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தனின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, சுன்னாகம் பிரதேச சபை தவிசாளர், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.09.2021இல் வெளியிடப்பெற்றது.